1971 டிசம்பர் 9]

வால்பாறை கூட்டுறவு பண்டகசாலை

*209 வினு.—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை கூட்டுறவுப் பண்டகசாலை கலைக்கப்பட்டு தனி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளாரா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) ஆம்.

(இ) பண்டகசாலையின் நிர்வாகத்தில் ஒழுங்கீனங்கள் காணப்பட்டதால் அதன் செயற்குழு கலைக்கப்பட்டது.

திரு. இ. ராமசாமி : தலைவர் அவர்களே, நிர்வாக போர்டில் ஒழுங்கீனங்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னுர்கள். எந்த அடிப்படையில் ஒழுங்கீனங்கள் நடந்திருக்கின்றன ? அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, ஒழுங்கீனங்களுடைய பட்டியல் எல்லாவற்றையும் என்னுல் இப்பொழுது சொல்வதற்கு இயலாது. ஒன்றைமட்டும் குறிப்பாகச் சொல்லலாம். பண்டகசாலையில் இருக்கவேண்டிய பொருள்களைச் சரிபார்த்தபோது ரூ 3,04,000 அளவில் பொருள்கள் காணப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : பண்டகசாலை ஒழுங்கீனம் காரணமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொல்கிறீர்களே, மு.ப. 10 00
ஒழுங்கீனத்திற்குக் காரணமானவர்கள் யார் ? அவர்களுடைய பெயர்களை தெரிவித்தார்களா, நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அமைச்சர் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இது கண்டுபிடிக்கப்பட்டது 1970-ல். ஆனுல் காரணமானவர்கள், அதற்கு முன்பு இருந்தவர்கள். அவர்கள் பெயர்களை இங்கே கொண்டு வரவில்லை. தெரிவிப்பதும் அவ்வளவு நல்லது அல்ல. தகுந்த நடவடிக்கை எடுக்கின்றேம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நடவடிக்கை எப்பொழுது எடுப்பீர்கள்? முடிப்பதற்கு எவ்வளவு நாள் ஆகும் என்பதை அமைச்சர் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : முதல் நடவடிக்கை எடுத்தாகிவிட்டது. அதை அரசு அதிகாரி மேற்கொண்டிருக்கிறுர். இனிமேல் இவர்களை disqualify பண்ணவேண்டும். அவர்கள் மீது பிராசிக்யூஷன் செய்யவும் முடியும். இவ்விவரங்களை வெளிப்படுத்துவது நல்லது அல்ல. வேலை நடந்து கொண்டிருக்கின்றது.